திரு. எம். எத்திராஜுலு : கடலூர் கூட்டுறவு எக்ஸ்-சர்விஸ்மென் சங்கத்தில் இருந்து 20 கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டுமென்றும், அதில் வேலை செய்த அதிகாரிகள் மூன்று பேரை நீக்கியது சரியல்ல என்றும், அவர்களை மீண்டும் வைக்கவேண்டுமென்றும், அப்படி வைக்கத் தவறினால் 1—2—1969-ல் வேலைநிறுத்தம் செய்யமுடியும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். பின்னர் வேலூரிலிருந்து லேபர் ஆபீசர் வந்து சமாதானப்படுத்தி விட்டு சென்றிருக்கிறார். அப்போது 22—2—1969-க்குள் மீண்டும் அவர்கள் வேலையில் சேர்க்கப்படாவிட்டால் திரும்பவும் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப் போவதாக சொல்லப்படுகிறதே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கூட்டுறவு மூலமாகக் கொடுக்கப்படும் தொகை திரும்ப வசூலிக்கப்படுகிறதா என்பது மூலக் கேள்வி. இங்கு அங்கத்தினர் கேட்கும் தகவல் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லமுடியும்.

MR. CHAIRMAN : Questions are over.

Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.)

II.—ANNOUNCEMENTS.

(1) BUSINESS OF THE HOUSE.

MR. CHAIRMAN : In partial modification of the programme already announced, the Legislative Council will sit on Friday, the 28th February 1969 instead of on the 27th February 1969 and 27th February will be a holiday for Bakrid.

(2) MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1969 (L.A. Bill No. 3 of 1969) as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council.

III—CALLING ATTENTION TO DELAY IN GIVING SERVICE CONNECTIONS TO PUMPSETS FOR IRRIGATION PURPOSES IN RAMANATHAPURAM DISTRICT.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது,

"பாசன காரியங்களுக்காக விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவு உற்பத்தி பாதிக்கப்படுதல்" என்பது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டது குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கீழே விவரித்துள்ள நடப்பு ஆண்டில் இரண்டாயிரத்து தொண்ணூற்று (2,096) விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டது.

ஏப்ரல் 1968	102
மே 1968	173
ஜூன் 1968	215
ஜூலை 1968	145
ஆகஸ்ட் 1968	349
செப்டம்பர் 1968	345
அக்டோபர் 1968	248
நவம்பர் 1968	245
டிசம்பர் 1968	274
	2096

நடப்பு ஆண்டில் ஏற்கெனவே 2,096 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதோடு கூட, இந்த ஆண்டில் எஞ்சிய மூன்று மாதக் கால அளவில் மேலும் 800 விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. 1961-ம் ஆண்டுக் கணக்கின்படி இந்த மாவட்டத்தில் இருந்த பாசனக் கிணறுகளின் மொத்த எண்ணிக்கை, 30,154. இதில் 16,903 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அதாவது மாநிலம் முழுவதும் மின்னிணைப்பு வழங்கிய பாசனக் கிணறுகள் 42 சதவீதமாயிருக்க, இம்மாவட்டத்தில் 56 சதவீதப் பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலே எடுத்துக் கூறியுள்ள முன்னேற்றத்தை ஒட்டிப் பார்த்தால், இம்மாவட்டத்தில் பல மாதங்களாக விசையேற்றங்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கத் தவறியதாகக் கூறுவது சரியன்று. ஒவ்வோர் ஆண்டிலும் கிட்டுகிற வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு உட்பட்டு, மின்சார வாரியம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தை வரையறுத்துக் கொள்ள வேண்டியுள்ளது என்றும், இந்த வரையறைக்குள் இம்மாவட்டத்தில் ஒவ்வோர் ஆண்டிலும் எத்தனை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியுமோ அத்தனைக்கும் மின் இணைப்பு கொடுப்பதற்கான நடவடிக்கையை வாரியம் எடுத்துக் கொண்டு வருகின்றது என்றும் இங்குக் குறிப்பிடலாம். இராமநாதபுரம் மாவட்டத்தில், மற்ற மின் இணைப்பு திட்டங்கள் தவிர, வேளாண்மைப் பணிகளுக்காக 355 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கும் சிறப்புத் திட்டம் ஒன்று ரூ. 32.6 லட்சம் செலவு மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு இந்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று இத் தொடர்பில் குறிப்பிடலாம்.

25th February 1969] [திரு. ஓ. பி. இராமன்]

இருப்பினும் உரிய தரங்களுக்கு ஏற்ப ஆதாயமற்றவையெனத் தெரிந்த திட்டங்களினாலும் அல்லது மின் இணைப்பு பெற விண்ணப்பதாரர்கள் தயாராக இராத காரணத்தினாலும் ஒரு சில நேர்வுகளில் மின் இணைப்பு கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். குறிப்பிட்ட நேர்வுகளில் நீண்டகாலம் தாமதம் ஏற்பட்டிருப்பதாக வாரியத்தின் நாட்டத்திற்கு கொண்டு வரப்பட்டால் அது பற்றி வாரியம் ஆய்வு செய்து தேவையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

IV.—GOVERNMENT BILL.

THE MADRAS ESSENTIAL ARTICLES CONTROL AND REQUISITIONING (TEMPORARY POWERS) AMENDMENT BILL, 1969 (L.A. BILL NO. 3 OF 1969)

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, "தமிழக சட்டப் பேரவை நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு 1969-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா[a] (சட்டப் பேரவை மசோதா எண் 3/69) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

1949-ம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையா பொருள்கள் மீது கட்டுப்பாடு செய்தலும் கேட்டுப் பெறுதலும் குறித்த (தற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின் செல்திறன் கால அளவு 1969 ஜனவரி 25-ம் நாளன்று முடிவடைந்தது. அதன் செல்திறன் கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு, அதாவது 1974 ஜனவரி 25-ம் நாள் முடிய நீட்டிப்பதே இம் மசோதாவின் நோக்கமாகும்.

போர் முயற்சிகள் சம்பந்தப்பட்ட உற்பத்தி காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கென மின் சக்தியைச் சேமித்து வைக்கும் நோக்கத்துடன், சென்ற உலகப் பெரும் போரின்போது இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழ் இந்திய அரசு மின்சக்தி வழங்கல் மீது கட்டுப்பாடு ஆணைகள் முதன் முதலாக விதித்தது. போர் முடிந்த பிறகு, தமிழ்நாடு 1949-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் மீது கட்டுப்பாடு செய்தலும் கேட்டுப் பெறுதலும் குறித்த (தற்காலிக அதிகாரங்கள் பற்றிய) சட்டத்தின் கீழ் இம் மாநிலத்தில் மின்சக்தி சம்பந்தமாக கட்டுப்பாடு விதிக்கல், நிலைப்படுத்துதல், மேல்வரி விதித்தல் போன்ற ஆணைகள் தொடர்ந்து செயலில் இருந்தன. அச்சட்டத்தின் செல்திறன் கால அளவும் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. தமிழ்நாடு மின் இணைப்பின் உற்பத்தித் திறன் இரண்டாவது திட்டத்தில் 256 மெகா வாட்டிலிருந்து 571 மெகா வாட்டாக உயர்ந்தது. நெய்வேலி மின்சக்தி உட்பட இப்போது அது 1,470 மெகா வாட்டாக உள்ளது. இனி அடிக்கடி மின்சார வெட்டு நிகழாதிருப்பதற்கு ஆவன செய்து வருகிறோம். கூடுதலான மின்சக்தி நிலையங்களைத் துவக்குவதன் மூலமும், மின் இணைப்பிற்குக்

---

a Printed as Appendix II on page 68